# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண் 43/மா/2025</u>

**<u>நாள்: 13.03.2026</u>**

M. விஜயன்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10, --- எதிர்மனுதாரர்
பெருநகர சென்னை மாநகராட்சி.

சென்னை–600 081, தண்டையார் பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.விஜயன் என்பவரின் 09.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.12.2024 அன்று பெறப்பட்டு 43/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**<u>ஆணை</u>**

சென்னை–600 081, தண்டையார் பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.விஜயன் என்பவர் தனது 09.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"1. நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சென்னை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். மேலும் அனைத்து இந்து திருக்கோவில்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு, பதிவு எண் 126/2020, என்ற இந்து சமயம் சார்ந்த அமைப்பில் உறுப்பினராக இருந்து இந்து திருக்கோயில்கள் தொடர்பான சேவைகளையும் ஆற்றி வருகிறேன். சென்னை மாவட்டம், கோடம்பாக்கம் மண்டலம்–10 வடபழனி பகுதியில் உள்ள அருள்மிகு. வடபழனி ஆண்டவர் முருகன் திருக்கோவிலுக்கு தினம்தோறுமும், விழா காலங்களிலும் மற்றும் முகூர்த்த நாட்களிலும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள். திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கோவில் நிர்வாகம் சார்பில் பூக்கடைகள் மற்றும் பூஜை பொருட்கள் விற்பனை செய்ய தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் மேற்கண்ட கோவில் சன்னதி தெருவின் கோவில் முகப்பு மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளில் பூ மாலை, மற்றும் இதர கடைகள் அதிக அளவில் சாலையை ஆக்கிரமித்து முளைத்துள்ளன. மேலும் அனுமதிக்கப்படாத தற்காலிக வாகன நிறுத்தங்களால் மேற்கண்ட சன்னதி தெரு மற்றும் மாட வீதிகள் மிகவும் குறுகியுள்ளன. இதன் காரணமாக கோவிலுக்கு வரும் பக்தர்கள் நிம்மதியாக இறை தரிசனம் செய்ய முடியாத அளவிற்கு சாலையில் கடும் நெரிசல் ஏற்படுகிறது. வழிபாட்டுத் தலங்களில் இருந்து 50 மீட்டர் தொலைவிற்கு அப்பால் மட்டுமே கடைகள் அமைக்க வேண்டும் எனற

விதியை மீறி அமைக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற வேண்டும் என விதிகள் உள்ளது, எனினும் இந்த விதிகள் மேற்கண்ட கோவிலின் அருகில் நடைமுறையில் இல்லை.

3. இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பு கடைகளால் 60 அடி இருக்க வேண்டிய மேற்கண்ட சன்னதி தெரு தற்போது பாதியாக குறைந்துள்ளது. இதனால் திருவிழா காலங்களில் சுவாமி வீதி உலா உள்ளிட்ட வைபவங்கள் நடத்துவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகிறது. மேலும் சாலைகளை ஆக்கிரமித்து செயல்படும் கடைகளால் பொதுமக்கள் வாகன ஓட்டிகள் கோயில் பக்தர்கள் என அனைத்து தரப்பினரும் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். கோயில் குளத்தைச் சுற்றியுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்போர் மற்றும் கார் பழுது பார்க்கும் நபர்களும் தங்கள் வாகனங்களை சாலையோரம் மற்றும் கோயில் குளத்தை சுற்றி நிறுத்தி அந்த இடத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்த விவகாரத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய சென்னை பெருநகர மாநகராட்சி, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்து அஜாக்கிரதையாக இருப்பதால் நாளுக்கு நாள் ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

4. இங்குள்ள பெரும்பாலான சாலையோர கடைகள் நடைபாதையை முழுவதும் ஆக்கிரமித்து சாலை வரை கடைகளை விரிவாக்கம் செய்துள்ளனர். ஹோட்டல்களில் பயன்படுத்தப்படும் கேஸ் சிலிண்டர்களை மிகவும் ஆபத்தான முறையில் நடைபாதையில் வைத்துள்ளனர். மேலும் இந்த கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களும் தங்கள் வாகனத்தை சாலையோரம் நிறுத்துவதால் சாலைகள் மேலும் குறுகி விடுகிறது. இதனாலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை ஒட்டி அம்மன் கோவில் தெருவிலும் இதே நிலை நீடிக்கிறது. மேலும் ஆண்டவர் கோவில் தெருவில் உள்ள நடைபாதை பல இடங்களில் பெயர்ந்து மண்மேடாக மாறி உள்ளது. நடைபாதை அமைக்கும் பொழுது இடையிடையே இரும்பு உருளைகள் வைத்து தடுப்புகள் அமைத்து வாகனங்கள் மற்றும் கடைக்காரர்கள் ஆக்கிரமிக்காத வகையில் கட்டமைப்பை ஏற்படுத்துவது தற்போதைய நடைமுறையாக பின்பற்றப்படுகிறது, ஆனால் வடபழனி முருகன் கோவில் பகுதிகளில் இந்த நடைமுறை எதுவுமே பின்பற்றாமல் அலட்சியப் போக்கை தொடர்கிறது.

5. இந்த பிரச்சனைகள் தொடர்பாக புகாரினை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் இரண்டு வருடங்களுக்கு முன்பே அனுப்பியிருந்தேன். எனினும் இரண்டு வருடங்கள் ஆகியும் சென்னை மாநகராட்சியால் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகாரினை விசாரணை செய்து அருள்மிகு. வடபழனி ஆண்டவர் முருகன் திருக்கோவில் சன்னதி தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றி மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரியஉத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்றத்தை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 19.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, மண்டல அலுவலரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை.

7. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8. இந்நிலையில், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய கடிதம் எண் ம.அ.10 ந.க. எண் /2026 நாள் 30.01.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 21.01.2026 நாளிட்ட கடிதத்தில், வடபழனி முருகன் கோவில், சன்னதி தெருவில் கோவில் முகப்பு மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் பூ மாலை மற்றும் இதர கடைகள் அதிக அளவில் சாலையினை ஆக்கிரமிப்பு செய்தும், தற்காலிக வாகன நிறுத்தங்களால் கோயில் சன்னதி தெரு மற்றும் அருகிலுள்ள தெருக்கள் முழுவதும் குறுகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வடபழனி ஆண்டவர் முருகன் திருகோவில் சன்னதி தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றவும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமலிருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மனுதாரர் அளித்த புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக உரிய ஆவணங்களுடன் விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், மண்டலம் 10, பகுதி–29, கோட்டம்–130–ல் உள்ள பழனி ஆண்டவர் கோயில் தெருவில் மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையிலும் கோவிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதியும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பழனி ஆண்டவர் கோயில் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் பல்வேறு நாட்களில் காவல் துறையின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்புகள் எந்தவித பாரபட்சமின்றி அகற்றப்பட்டு வருகிறது என்பதும், நடைபாதை மற்றும் சாலையினை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் மற்றும் சட்டவிரோத வாகன நிறுத்தங்கள் தொடர்பாக பெருநகர சென்னை மாகராட்சி மற்றும் பெருநகர சென்னை காவல் துறையின் மூலம் அபராதங்கள் விதிக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகிறது என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கோவிலின் முன்புறம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த திருகோவிலுக்கு சொந்தமான இடத்தின் சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை காரணமாகவும் மெட்ரோ பணியின் காரணமாகவும் அந்த பகுதியில் தொடர் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனை சீர்படுத்தும் நோக்கில் காவல்துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருகிறது என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுத்து அந்த பகுதியினை சீர்படுத்துவதற்கும் வடபழனி ஆண்டவர் கோவில் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல விற்பனை குழுவில் (Zonal town Vending Committee) அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யும் தெருவாக மாற்ற முன்மொழியப்பட்டுள்ளது என்பதும், இதனால் இந்த தெருவில் எதிர்காலங்களில் சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட்டு நடைபாதை கடைகள் அனைத்தும் சீர்படுத்தப்படும் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய கூற்றுப்படி மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

9. மனுதாரர் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

10. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் சார்பாக உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 30.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

“மனுதாரர் புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பழனி ஆண்டவர் கோவில் தெரு மற்றும் அதனை சுற்றி உள்ள தெருக்களின் நடைபாதை மற்றும் சாலையினை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்த கடைகள் மற்றும் சட்ட விரோத வாகன நிறுத்தங்கள் பல்வேறு நாட்களில் காவல்துறையின் மூலம் அபராதம் விதிக்கப்பட்டு காவல் துறையின் ஒத்துழைப்புடன் அகற்றப்படுகிறது.

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள ஆக்கிரப்புகளை அகற்றுவதற்கும் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுத்து அந்த பகுதியினை சீர்படுத்துவதற்கும், வடபழனி ஆண்டவர் கோவில் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல விற்பனை குழுவில் (Zonal Town Vending Committee) அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யும் தெருவாக மாற்ற முன்மொழியப்பட்டுள்ளது. இதனால் இந்த தெருவில் எதிர் காலங்களில் சட்ட விரோத ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட்டு நடைபாதை கடைகள் அனைத்தும் சீர்படுத்தப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.’.

11. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

வடபழனி ஆண்டவர் முருகன் கோவில், சன்னதி தெருவில் கோவில் முகப்பு மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் பூ மாலை மற்றும் இதர கடைகள் அதிக அளவில் சாலையினை ஆக்கிரமிப்பு செய்தும், தற்காலிக வாகன நிறுத்தங்களால் கோயில் சன்னதி தெரு மற்றும் அருகிலுள்ள தெருக்கள் முழுவதும் குறுகியுள்ளதாகவும், வழிபாட்டுத் தளங்களில் இருந்து 50 மீட்டர் தொலைவிற்கு அப்பால் மட்டுமே கடைகள் அமைக்க வேண்டும் என்ற விதி பின்பற்றவில்லை என்பதும், அதனால் வடபழனி ஆண்டவர் முருகன் திருகோவில் சன்னதி தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ளது என்பதும், எனவே ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றவும் மற்றும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமலிருக்க நடைபாதையின் இடையே இரும்பு உருளைகள் வைத்து தடுப்புகள் அமைக்க வேண்டும் என்பது மனுதாரரின் மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பழனி ஆண்டவர் கோவில் தெரு மற்றும் அதனை சுற்றி உள்ள தெருக்களின் நடைபாதை மற்றும் சாலையினை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்த கடைகள் மற்றும் சட்ட விரோத வாகன நிறுத்தங்கள் பல்வேறு நாட்களில் காவல்துறையின் மூலம் அபராதம் விதிக்கப்பட்டு காவல் துறையின் ஒத்துழைப்புடன் அகற்றப்படுகிறது என்பதும், அப்பகுதிகளில் உள்ள ஆக்கிரப்புகளை அகற்றுவதற்கும் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுத்து அந்த பகுதியினை சீர்படுத்துவதற்கும், வடபழனி ஆண்டவர் கோவில் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல விற்பனை குழுவில் (Zonal Town Vending Committee) அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யும் தெருவாக மாற்ற முன்மொழியப்பட்டுள்ளது என்பதும், இதனால் இந்த தெருவில் எதிர் காலங்களில் சட்ட விரோத ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட்டு நடைபாதை கடைகள் அனைத்தும் சீர்படுத்தப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பழனி ஆண்டவர் கோவில், சன்னதி தெரு மற்றும் அதனை சுற்றி உள்ள தெருக்களின் நடைபாதை மற்றும் சாலையினை சட்ட விரோதமான ஆக்கிரமிப்பால் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கவும், புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும், வடபழனி ஆண்டவர் கோவில் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல விற்பனை குழுவில் (Zonal Town Vending Committee) அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யும் தெருவாக மாற்ற முன்மொழியப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, வடபழனி ஆண்டவர் கோவில் தெருவினை அங்கீகரிக்கப்பட்ட விற்பனை செய்யும் தெருவாக மாற்றவுள்ள முன்மொழிவினை விரைந்து செயல்படுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M.விஜயன்,
கதவு எண்.3/13
4வது தெரு, கருணாநிதி நகர்,
தண்டையார் பேட்டை,
சென்னை–600 081.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 64 N.S.K. சாலை,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/3/26
செயலாளர்.
17/3/26

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032